# ஒன்றாக வளர்வது மிகவும் சிறந்தது




## 4.1 எப்போதும் சந்தோஷமாயிருங்கள்

**வேத வசனம்:** **கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.**
*பிலிப்பியர் 4:4*



**அறிக்கை:** **கர்த்தருக்குள் மகிழ்ச்சியே எங்கள் பெலன்**

**சத்தியம்:** உலகத்தில் உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்று கர்த்தர் சொன்னார். ஆகையால் நாம் எப்போதும் மகிழ்ந்திருப்போம்.

### வேதப் பகுதி: 2 கொரிந்தியர் 8:1-5

**பாடம்**

**1. உலகத்தில் உபத்திரவம் உண்டு:** தேவனுடைய வார்த்தையின் படி, இந்த உலகத்தில் நாம் பாடுகளை எதிர்கொள்ள வேண்டும். வாலிபர்களும் சோர்ந்துபோவார்கள், பெலவான் கள் இடறி விழுவார்கள். சில வேளைகளில் நாம் வித்தியாசமான பிரச்சனைகளையும் மன அழுத்தங்களையும் சந்திக்கும்போது நம் இருதயங்கள் வருந்துவதுடன் கல்லைப்போல கடினமாகவும் மாறுகிறது. (யோவான் 16:33)

**2. உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தம் உண்டு:** தேவனோ நாம் எப்போதும் சந்தோஷமாக இருக்கும்படி மறுபடியும் மறுபடியும் சொல்லுகிறார். வேதப்புத்தகம் சொல்லுகிறது, தேவன் மனிதன் போதும் என்கிற மனதுடன் அவருடைய பிரசன்னத்தில் கிடைக்கும் மகிழ்ச்சியில் மூழ்கி இருக்கும்படி சொல்லுகிறார். சமீபத்திய ஆய்வு ஓர் ஆச்சரியமான செய்தியைச் சொல்லுகிறது. மனிதன் சராசரியாக ஐந்துமுறை சிரிக்கிறான். இது எப்போதும் அதிக மகிழ்ச்சியுடன் இருக்கும் குழந்தைகளிடமிருந்து முற்றிலும் மாறுபடு கிறது. அதிக மகிழ்ச்சியுடன் இருப்பவர்கள் ஒரு நாளைக்கு 100 முறை கூடச் சிரிக்கிறார்கள். தேவன் குழந்தைகளைப்போல நாம் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்.

**3. கர்த்தரை விசுவாசிப்பதில் ஆனந்தம்:** நாம் கர்த்தரை விசுவாசிப்பதால் நமக்கு மாபெரும் மகிழ்ச்சி உண்டு. பவுல் அப்போஸ்தலர் சொல்லுகிறார், "அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள். இப்பொழுது அவரைத் தரிசியாமலி ருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமா யிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து…" தேவன் நம்முடைய வேதனைகளை மகிழ்ச்சியாக மாற்றவும் அனைத்து வருத்தங்களையும் அவர் தரக்கூடிய மாபெரும் மகிழ்ச்சியாக மாற்றும்படி சித்தம் கொண்டிருக்கிறார். (1 பேதுரு 1:8, ஏசாயா 61:3)

**4. உற்சாகமுள்ள இருதயம் நல்ல மருந்து:** வேதப்புத்தகம் கற்பிக்கிறது, "மனமகிழ்ச்சி நல்ல ஒளஷதம். முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்". ஒரு மகிழ்ச்சியான இருதயம் நல்ல மருந்தாகும். எதிர்மறையான உணர்வுகள் உடல் ஆரோக்கியத்தைப் பாதிக் கும். தொடர்ச்சியான வேதனைகளும் வருத்தங்களும் உடலுக்கு ஆபத்தானவை. (நீதி. 17:22)

**5. மகிழ்ச்சியுள்ள மனுஷன் பலவானாய் இருப்பான்:** தண்ணீரில் மிதக்கவிடப்பட்ட ஒரு தக்கையைத் தண்ணீருக்குள் மூழ்கும்படி அழுத்தினாலும் அது மூழ்காது". இதனைச் செய்து காட்டி தேவனுடைய ஜனங்களுக்குள்ளே உள்ள தேவனுடைய மகிழ்ச்சி அதிக பலம் உள்ளது என்று சொல்லுங்கள். சபைகளில் சில சகோதர சகோதரிகள் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பதைக் காணலாம். அவர்கள் பலம் உள்ளவர்களாய் அதிக சவால்களை கையாளும் திறம் படைத்தவர்கள். தேவனுடைய பிரசன்னம் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் உள்ளங்களில் உருவாக்கும். (நெகேமியா 8:10)

**முடிவுரை:** தேவன் மகிழ்ச்சியைத் தருகிறவர். ஆகையால் நாம் கலங்காமல் தேவனை விசுவாசித்து எப்போதும் அவருக்குள் மகிழ்ந்திருப்போம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.